ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2081/14 - 2018 ජූලි මස 24 වැනි අඟහරුවාදා - 2018.07.24
*2081/14 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபை

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களை கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**ஏ. விமலவீர,**
தலைவர்,
ஆதுலர் மனைத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 13.

**அட்டவணை**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதிய 104 ஆம் இலக்க வர்த்தமானில் வெளியிடப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆம் திகதிய 1800/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்கு பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

1A - G28149 - 32 (2018/07)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

II ஆம் பாகம்

தொழிலாளர் வகுப்பு

தரம் I
தலைமைத் தாதி, அப்போதிக்கரிமார்.

தரம் II
வாகடர், தாதிச் சகோதரி, ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியக்கத் தொழில் நுட்பவியலாளர்.

தரம் III
(அ) தாதிமார், மருத்துவிச்சிமார், களஞ்சியக்காப்பாளர்
(ஆ) பயிற்சி பெறும் தாதிமார் : பயிற்சியின் 1 ஆம் ஆண்டு
பயிற்சியின் 2 ஆம் ஆண்டு
பயிற்சியின் 3 ஆம் ஆண்டு

தரம் IV
எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், வரவேற்பாளர்கள், தொலை பன்னி இயக்குநர்கள், காசாளர்கள்.

தரம் V
கவனிப்பாளர்கள், மருந்தகர்கள், அறுவை மருத்துவ மருந்துகட்டுநர்கள், உணவு மேலாளர், மேற்பார்வையாளர்கள், வாட்டு எழுதுவினைஞர்கள், உணவு பட்டியல் எழுது வினைஞர்கள்.

தரம் VI
ஓடலிமார், பியோன்மார், சமையற்காரர்கள், காவலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள்.

தரம் VII
துணியறைக் கவனிப்பாளர்கள், தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெருக்குநர்கள், சாப்பாட்டறைப் பையன்கள்.

"ஆண்டு"என்பது, எவரேனும் பயிற்சி பெறும் தாதி தொடர்பாக, பன்னிரண்டு மாதங்கள் தொழிலில் ஈடுபடுத்தல் எனக் கொண்ட ஊழியமென கருதப்படல் வேண்டும்.

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. | தரம் VI<br>ரூ. ச. | தரம் VII<br>ரூ. ச. | தரம் VIII<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,975.00 | 14,652.00 | 14,110.00 | 8,870.00 | 13,674.00 | 13,239.00 | 12,810.00 | 12,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 15,225.00 | 14,877.00 | 14,310.00 | 9,020.00 | 13,849.00 | 13,389.00 | 12,935.00 | 12,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 15,475.00 | 15,102.00 | 14,510.00 | 9,170.00 | 14,024.00 | 13,539.00 | 13,060.00 | 12,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 15,725.00 | 15,327.00 | 14,710.00 | | 14,199.00 | 13,689.00 | 13,185.00 | 12,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 15,975.00 | 15,552.00 | 14,910.00 | | 14,374.00 | 13,839.00 | 13,310.00 | 12,900.00 |
| 6 ஆம் ஆண்டு | 16,225.00 | 15,777.00 | 15,110.00 | | 14,549.00 | 13,989.00 | 13,435.00 | 13,000.00 |
| 7 ஆம் ஆண்டு | 16,475.00 | 16,002.00 | 15,310.00 | | 14,724.00 | 14,139.00 | 13,560.00 | 13,100.00 |
| 8 ஆம் ஆண்டு | 16,725.00 | 16,227.00 | 15,510.00 | | 14,899.00 | 14,289.00 | 13,685.00 | 13,200.00 |
| 9 ஆம் ஆண்டு | 16,975.00 | 16,452.00 | 15,710.00 | | 15,074.00 | 14,439.00 | 13,810.00 | 13,300.00 |
| 10 ஆம் ஆண்டு | 17,225.00 | 16,677.00 | 15,910.00 | | 15,249.00 | 14,589.00 | 13,935.00 | 13,400.00 |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

பனிக்கட்டி, வளி ஊட்டப்பப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

*பனிக்கட்டி, வளி ஊட்டப்பப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாகத் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணை யினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**ஏ. விமலவீர,**
*தலைவர்,*
*பனிக்கட்டி, வளி ஊட்டப்பப்பட்ட நீர் வகை,*
*பழரசம் ஜாம் உற்பத்தித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
*2018, யூலை 16.*

**அட்டவணை**

*பனிக்கட்டி, வளி யூட்டப்பப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1963 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் தேதிய 13535 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதிய 1823/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

பாகம் II

தொழிலாளர் வகுப்பு

தரம் I

*பிரதான ஐஸ்கிறீம், பழரசம், ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) கங்காணிமார், தலைமைப் பாணி தயாரிப்போர், நீர் வடித்தற் பொறித் தொகுதி இயக்குநர்கள், தகரப்புட்டி ஆக்குநர்கள், தச்சர், நிரப்புநர் (தன்னியக்க), செவ்வை பார்ப்போர்.*

தரம் II

*உதவி ஐஸ்கிரீம்/பழரசம், ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) இத் தொழிலுக்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வேறு தொழிலாளர்கள், தகரப்புட்டி பழுதுபார்ப்போர், கார்பன்டை ஒக்சைட் வாயுக் கட்டுப்பாட்டாளர், உதவி பாணி தயாரிப்போர், பணியாளர்கள், மூடியிடுநர், போத்தல் துப்பரவு பரிசோதகர்கள், கார்பனேட்டர் இயக்குநர்கள், உற்பத்தி எண்ணுவோர், நிரப்புநர் (கையால்), கட்டுத் துண்டிடுவோர் (தன்னியக்க), போத்தல் கழுவுநர், கனிப்பொருள் அல்லது வளியூட்டப்பட்ட நீர் வகை உற்பத்தியின் தன்னியக்க எந்திரங்களில் ஈடுபட்டுள்ள வேறெவரேனும் வேலையாளர்கள், பனிக்கட்டி அறுப்போர்.*

தரம் III

*ஐஸ்கிரீம், பழரசம், ஜாம் புட்டிகளில் நிரப்புநர், ஐஸ்கிரீம், பழரசம், ஜாம் களஞ்சியப்படுத்துநர், பனிக்கட்டி களஞ்சியப்படுத்துநர், பனிக்கட்டி பொதியிடுவோர், பனிக்கட்டி ஏற்றுநர், பாணியறைத் தொழிலாளர்கள், போத்தல் பொதி அவிழ்ப்போர், போத்தல் பிரித்து வைப்போர் அல்லது*

சுத்திகரிப்போர், போத்தல் கழுவி ஏற்றுவோர், பெட்டி நிரப்புநர், போத்தல் பொதியிடுவோர், சுத்திகரிப்போர் அல்லது பெருக்குவோர், போத்தல் கையால் சுத்திகரிப்போர், பெட்டி காவுநர் அல்லது அடுக்குநர், பண்டகசாலைத் தொழிலாளர்கள், கட்டுத் துண்டிடுவோர் (கையால்), வாகனத்தில் ஏற்றுவோர்.

**ஒரு மாதத்திற்கு கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | வகுப்பு I | வகுப்பு II | வகுப்பு III |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,125.00 | 13,560.00 | 13,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,275.00 | 13,685.00 | 13,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,425.00 | 13,810.00 | 13,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,575.00 | 13,935.00 | 13,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,725.00 | 14,060.00 | 13,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,875.00 | 14,185.00 | 13,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 15,025.00 | 14,310.00 | 13,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 15,175.00 | 14,435.00 | 13,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 15,325.00 | 14,560.00 | 13,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 15,475.00 | 14,685.00 | 13,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 15,625.00 | 14,810.00 | 14,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 15,775.00 | 14,935.00 | 14,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 15,925.00 | 15,060.00 | 14,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 16,075.00 | 15,185.00 | 14,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 16,225.00 | 15,310.00 | 14,400.00 |
| 16 ஆம் ஆண்டு | 16,375.00 | 15,435.00 | 14,500.00 |
| 17 ஆம் ஆண்டு | 16,525.00 | 15,560.00 | 14,600.00 |
| 18 ஆம் ஆண்டு | 16,675.00 | 15,685.00 | 14,700.00 |
| 19 ஆம் ஆண்டு | 16,825.00 | 15,810.00 | 14,800.00 |
| 20 ஆம் ஆண்டு | 16,975.00 | 15,935.00 | 14,900.00 |
| 21 ஆம் ஆண்டு | 17,125.00 | 16,060.00 | 15,000.00 |
| 22 ஆம் ஆண்டு | 17,275.00 | 16,185.00 | 15,100.00 |
| 23 ஆம் ஆண்டு | 17,425.00 | 16,310.00 | 15,200.00 |
| 24 ஆம் ஆண்டு | 17,575.00 | 16,435.00 | 15,300.00 |
| 25 ஆம் ஆண்டு | 17,725.00 | 16,560.00 | 15,400.00 |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

*தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாகத் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணை யினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**ஏ. விமலவீர,**
*தலைவர்,*
தோல் பதனிடுதல், பாதணிகள்,
தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான
*சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2018, யூலை 14.*

**அட்டவணை**

*தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் தேதிய 14921 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிய 1800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

பாகம் II

*தோல்பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் தொழிலாளர் வகுப்புகளுக்குரிய ஊழியர்களுக்கான நேர வேலைக்குரிய ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பள அளவு கீழ்க் காணும் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமைத்தல் வேண்டும்.*

தொழிலாளர் வகுப்பு

**தோல் பதனிடுதல் :**

தரம் I

*பதனிடா உரிவையைக் கழுவுதல், உரிவையைச் சுண்ணாம்பில் கொதிக்கவைத்தல், சருமத்திலிருந்து மயிரை அகற்றுதல், சருமத்திலிருந்து சதையை அகற்றுதல், இரசாயனப் பொருட்களிடல், வெளிறச் செய்தல், மென்மையாக்கல், ஊறவைத்தல், உப்பிடல், மேல்மிச்சமான எண்ணெய்யை அகற்றுதல்.*

தரம் II

*பிரித்தல், சிவிறுதல், உப்பிட்ட தோல்களை அடுக்குதல், தோலை நேர்த்தியாக்குதலும், தெரிவுசெய்தலும், தரப்படுத்தலும், சேர்வையில் தோய்த்தல், எந்திரங்களை இயக்குதல், சுருக்கு நீக்கி அழுத்தமாக்குதல்.*

தரம் III

*மா இட்டுக் காயவைத்தல், பதனிடா உரிவையைப் பதப்படுத்தல், துப்பரவு செய்வோர், கட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின் போது நிகழும் மற்றும் யாதாயினும்.*

***பாத அணி உற்பத்தியும், பழுதுபார்த்தலும் :***

தரம் I

சேர்த்தல், மேற்தோல் செய்தல், புடவை ஒட்டுதல், எந்திர வேலை மேற்தோல் வெட்டுதல், விளிம்பை நேர்த்தியாக்குதல், அச்சில் மேற்தோல் ஒட்டுதல், அடிப்பாகங்களை அழுத்துதல், குதி செய்தல், குதி அமுக்குதல், மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், விளிம்பு அமைத்தல், அடித்தோல் வெட்டுதல்.

தரம் II

ஏற்றுதல், சப்பாத்து அழுத்துதல், மேற்தோல் செய்தல், கச்சு அமைப்பதற்கு துவாரமிடல், தறைதல், வார்ப்பூட்டு இணைத்தல், அடித்தோல் தைத்தல், அடித்தோலை மென்மையாக்கல், மேலதிகப் பாகங்களை அகற்றுதல், கரைசல் தயாரித்தல், மேற்தோலின் முன்புறத்தை அமைத்தல், கல்லறைகளை அமைத்தல்.

தரம் III

இறப்பர் சேர்வை கலத்தல், கச்சு வெட்டுதல், மேற்தோலைத் தறைதல், சேர்வையில் தோய்த்தல், மேற்தோல் இடல், மேற்தோல் தயாரித்தல், பின் தையலுக்குச் சேர்வை பூசுதல், மினுக்குதல், செய்து முடித்தல், பெட்டிகள் வழங்கல், பெட்டிகளுக்கு முத்திரையிடல், பெட்டிகளுக்கு நாமவிலாசமிடல், துப்பரவு செய்வோர், கூட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் செய்கை யாதாயினும்.

***தோற் பொருட்கள் உற்பத்தி செய்தல் :***

தரம் I

இயந்திரத்தினாலும், கையாலும் மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், துளையிடலும் பிளவு ஆக்கலும், தறைதல், கையால் அமுக்குதல், காற்பந்துகள், கைப்பந்துகள், வலைப்பந்துகள் செய்தல், பயணப் பைகள், சாதாரண உறைகள், பணப் பைகள் செய்தல் (கையால்).

தரம் II

தெறிகள், வார்ப்பூட்டுகள், பொத்தான்கள் அமைத்தல், சித்தரித்தல், பூட்டுகள், இணைப்புக்கள், கைப்பிடிகள் அமைத்தல், தைத்தல், பயணப் பைகள் செய்தல் (இயந்திரத்தால்).

தரம் III

அடையாளமிடல், சேர்வையும் பசையுமிடல், காற்றுச் செலுத்தலும் முத்திரையிடலும், மேலே குறிக்கப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது வேலையின் போது நிகழும் மற்றும் வேலை யாதாயினும்.

***தொழில் பயிலுனர் அல்லது பயிற்சியாளர்***

மேலே கூறப்பட்ட பயிற்சியாளர் அல்லது பயிலுநர் எவரேனும் தொடர்பான பயிற்சிக் காலம் 156 வேலை நாட்களைக் கொண்ட காலப் பகுதியாக அமையுமெனக் கருதப்படல் வேண்டும்.

***அட்டவணை***

**ஒரு மாதத்திற்கான விளக்க ஆகக் குறைந்த சம்பள வீதம்**

**தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில்**

| ஊழிய ஆண்டு | தரம் I ரூ.ச. | தரம் II ரூ.ச. | தரம் III ரூ.ச. | தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர் ரூ.ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 16,275.00 | 15,624.00 | 15,000.00 | 7500.00 |
| 2 ஆம் ஆண்டு | 16,425.00 | 15,749.00 | 15,100.00 | |
| 3 ஆம் ஆண்டு | 16,575.00 | 15,874.00 | 15200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 16,725.00 | 15,999.00 | 15,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 16,875.00 | 16,124.00 | 15,400.00 | |

08 - 338/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.